

# ரஸூல் (ஸல்) அவர்களின் மீது அன்பை வெளிப்படுத்தும் சரியான முறை

# ஜுமுஆ பேருரை

**HAZRATH KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH Mosque, London.
**21.09.2012**

# ரஸூல் (ஸல்) அவர்களின் மீது அன்பை வெளிப்படுத்தும் சரியான முறை

- இந்த கீழ்த்தரமான செயலுக்கு வருத்தம் மற்றும் கோபத்தை வெளிப்படுத்தும் உரிமை முஸ்லிம்களுக்கு நிச்சயமாக உள்ளது.
- மூஃமின்களின் வேலை தமது நாவுகளை இந்த நபியின் மீது ஸலவாத் ஓதுவதன் மூலம் ஈரமாக வைத்திருக்க வேண்டும்.
- உலகின் பல பகுதிகளிலும் பெரும் எண்ணிக்கையில் வாழும் முஸ்லிம்கள் தமது Vote உரிமையை பயன்படுத்தி உலகில் ஒரு புரட்சி ஏற்படுத்த முடியும்.
- நான்கு நாட்கள் போராட்டம் நடத்திவிட்டு உட்கார்ந்து விடுவதால் இப்பிரச்சனை தீராது. சர்வதேச அந்தஸ்து பெற்ற முஸ்லிம் வக்கீல்கள் ஒன்றுசேர்ந்து ஒரு வழியை உருவாக்க வேண்டும்.

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**
**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
**(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள்**
**இலண்டனிலுள்ள ஃபஸ்ல் பள்ளிவாயிலில் 21.09.2012**
**அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை**

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் சூரா அல் அஹ்ஸாபின் 57, 58 வசனங்களை ஓதினார்கள்:**

*அதன் பொருள்: நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது மலக்குகளும் நபியின் மீது அருளை இறக்குகின்றனர். நம்பிக்கை கொண்டவர்களே! நீங்களும் அவர் மீது அதிகமதிகம் தரூதும் ஸலவாத்தும் ஓதுங்கள்.*

*அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலுக்கு துன்பத்தை கொடுப்பவர்களை அல்லாஹ் இவ்வுலகிலும், மறுமையிலும் சபித்துள்ளான். மேலும் அவன் இழிவான தண்டனையையும் அவர்களுக்காக தயார் செய்து வைத்துள்ளான். (33:57-58)*

இன்றைய நாட்களில், உலகில் முஸ்லிம் நாடுகளிலும், உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் முஸ்லிம்களின் மத்தியிலும் இஸ்லாத்தின் எதிரிகள் செய்த மிகவும் வெறுக்கத்தக்க, அறுவறுப்பான, கீழ்த்தரமான, அநியாயமான செயலின் காரணமாக கடுமையான மனவருத்தம் மற்றும் கோபத்தின் அலைகள் ஏற்பட்டுள்ளன. இந்த வருத்தம் மற்றும் கோபத்தை வெளிப்படுத்தும் உரிமை நிச்சயமாக முஸ்லிம்களுக்கு உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மையான அந்தஸ்து என்ன என்பதைப் பற்றி ஒரு முஸ்லிம் சரியாக தெரிந்திருந்தாலும், தெரிந்திருக்காவிட்டாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்காக, மதிப்பிற்காக உயிரையும் விட தயாராகி விடுகின்றார்.

இஸ்லாத்தின் எதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கீழ்த்தரமான ஒரு திரைப்படத்தை தயாரித்துள்ளார்கள். மேலும் எந்த அளவு அநியாயமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் வகையில் செய்யப்பட்டுள்ளதோ இதற்காக ஒவ்வொரு முஸ்லிமுடைய மனவருத்தமும், கோபமும் ஏற்படுவது ஓர் இயற்கையான விளைவுதான். மனித குலத்தின்

கருணையாளரும், அகில உலகங்களுக்கும் அருட்கொடையாளரும், அல்லாஹ்வின் அன்பிற்குரியவருமான ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், தமது இரவுகளையும் படைப்பினங்களின் மீது கவலை கொண்டவராக கண் விழித்தவாறு கழித்தார்கள். படைப்பினங்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக எந்த அளவுக்கு தமது உயிரின் வேதனையை வெளிப்படுத்தினார்கள். தம்மை கவலையில் ஆழ்த்திக் கொண்டார்கள் என்றால், இதனால் அர்ஷின் இறைவன் அவர்களைப் பார்த்து, ‘இம்மக்கள் தம்மை படைத்த இறைவனை அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்பதற்காக கவலைப்பட்டு நீர் உம்மையே மாய்த்துக் கொள்வீரா!’ என்றான்.

இப்படிப்பட்ட மகத்தான மனிதகுல பேருபகாரியைப் பற்றி, இழிவு நிறைந்த ஒரு படத்தினால் நிச்சயமாக ஒரு முஸ்லிமின் உள்ளம் இரத்தம் சிந்தத்தான் வேண்டும். சிந்தவும் செய்கிறது. எல்லாரையும் விட அதிகமாக ஓர் அஹ்மதி முஸ்லிமுக்கு கஷ்டம் ஏற்பட்டுள்ளது. நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பர், உண்மையான அடியாரை ஏற்றுக் கொண்டவர்களைச் சார்ந்தவர்கள் ஆவோம். அவர்கள் நமக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய மகத்தான அந்தஸ்தைப் புரியும் திறனை வழங்கியுள்ளார்கள். எனவே நமது உள்ளம் இந்த செயலால் சல்லடையாகி விட்டது. நமது இதயம் துண்டுதுண்டாகியுள்ளது. இந்த அநியாயக்காரர்களை பழிவாங்குவாயாக! என்று கூறியவாறு நாம் இறைவனது சன்னிதானத்தில் ஸஜ்தாவில் விழுகிறோம். உலகம் இருக்கும் வரை இவர்களை உதாரணமாக இருக்கும் அளவுக்கு படிப்பினைக்குரிய அடையாளமாக்குவாயாக! உலகம் இருக்கும் வரை இதை மக்களுக்கு ஒரு படிப்பினை ஆக்குவாயாக! நமக்கு காலத்தின் இமாம், ரஸுல் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவுக்கு பேரன்பு கொள்ள வேண்டும் என்று இவ்வாறு புரிய வைத்துள்ளார்கள். காட்டிலுள்ள பாம்புகள் மற்றும் விலங்குகளுடன் கூட சமாதானம் செய்து கொள்ள முடியும். ஆனால் நமது எஜமானரும் தலைவருமான ஹஸ்ரத் முஹம்மது ரஸுலுல்லாஹ் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களை அவமானப்படுத்தக்கூடியவர்கள் மேலும் அதில் நிலைத்திருப்பவர் –களுடன் நாம் சமாதானம் செய்து கொள்ள முடியாது.



**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

முஸ்லிம்கள் எத்தகைய சமுதாயம் எனில், ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்காக உயிரையும் தருபவர்களாவர். இரவும் பகலும் ஹஸ்ரத் ரஸுல் கரீம் (ஸல்) அவர்களை ஏசுவதையே தொழிலாக கொண்டிருப்பவர்களுடன் தமது பத்திரிகைகள், நூல்கள், பிரசுரங்களில் மிகவும் அவமரியாதையாக அவர்களைப் பற்றி குறிப்பிடுகின்றவர்களுடன், மிகவும் அசுத்தமான வார்த்தைகளால் நினைவு கூறுகின்றவர்களுடன் அன்பு பாராட்டி, நட்புறவு கொள்வதை விட செத்து விடுவதை பெரிதாகக் கருதக்கூடியவர்களாவர்.

**அவர்கள் கூறுகின்றார்கள்:** நினைவில் கொள்ளுங்கள்! அத்தகைய மக்கள் தமது சமுதாயத்திற்கும் நன்மையை விரும்புபவர்கள் அல்லர். ஏனெனில் அவர்கள் அவர்களது பாதையில் முட்களைப் பரப்பக் கூடியவர்களாவர். நான் உண்மையாகவே கூறுகின்றேன். நாம் காட்டிலுள்ள பாம்புகள், வன மிருகங்களுடன் கூட சமாதானம் செய்து கொள்வது சாத்தியமாகும். ஆனால் நாம் இறைவனின் தூய நபிமார்களின் கண்ணியத்தைப் பற்றி தீய வார்த்தைகளைப் பேசுவதிலிருந்து விலகாதவர்களுடன் சமாதானமாக போவது சாத்தியமற்றதாகும். ஏச்சுப்பேச்சுகளிலும் தீய வார்த்தைகளிலுமே வெற்றி இருப்பதாக அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் ஒவ்வொரு வெற்றியும் வானத்திலிருந்து வருகிறது.

**கூறுகின்றார்கள்:** தூய வார்த்தைகளை உடைய மக்கள் தமது தூய வார்த்தைகளின் பரக்கத்தால் இறுதியில் உள்ளங்களை வெற்றி கொண்டு விடுகிறார்கள். ஆனால் அசுத்தமான இயல்புடைய மக்கள் நாட்டில் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் பிரிவினையையும் பிளவையும், உருவாக்குவதைத் தவிர வேறெந்த திறமையையும் கொண்டிருப்பதில்லை.

**கூறுகின்றார்கள்:** அனுபவம் தரும் சாட்சியாவது இத்தகைய தீய சொற்களை கூறுபவர்களின் முடிவு நல்லதாக இருப்பதில்லை. இறைவனின் தன்மானம் இறுதியில் தன் அன்பிற்குரியவர்களுக்காக தனது வேலையைக் காட்டி விடுகிறது. (ஆதாரம்: செஷ்மாயே மஃரிஃபத், ரூஹானி கஸாயின் பாகம் 23, பக்கம் 385-387) இக்காலத்தில் செய்தித்தாள்கள், பிரசுரங்கள் மற்றும் மற்ற ஊடகங்களும் இந்த

வீணான விசயத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன. பிடிவாதத்தால் இவர்கள் இறைவனுடன் மோதுகின்றார்கள். இன்சா அல்லாஹ் இவர்கள், இறைவனின் பிடியில் விரைவில் வருவார்கள். இவர்கள் பிடிவாதத்தில் இருக்கிறார்கள். தனது அநீதியான செயலை பிடிவாதத்துடன் வெளிப்படுத்திக்கொண்டே செல்கின்றனர்.

2006-ல் டென்மார்க்கின் தீய இயல்பு கொண்டவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி வீணான ஒரு படத்தை சித்தரித்தார்கள். அப்போதும் கூட நான் ஜமாஅத்திற்கு ஒரு சரியான எதிர்நடவடிக்கை குறித்து கவனமூட்டியிருந்தேன். அதில் கூறியிருந்தேன். இந்த அநீதியிழைப்போர் முன்னரும் உருவாகி வந்தனர். இத்துடன் முடியப் போவதில்லை. முஸ்லிம்களின் தரப்பில் செய்யப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களால், இத்தகைய நடவடிக்கைகளால் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. இன்னும் சொல்வதாயின், வருங்காலத்திலும் இம்மக்கள் இந்த வேலைகளைச் செய்து கொண்டுதான் இருப்பார்கள் என்று நான் கூறினேன். அதனை விட அதிகமாகவே இம்மக்கள் இந்த வீணானவற்றிலும், அநியாயத்திலும் இறங்கியுள்ளதை பார்க்கிறோம். அன்றிலிருந்து இவர்களது செயல் அதிகரித்துக் கொண்டே தான் செல்கிறது. இது இஸ்லாத்திற்கு எதிராக இவர்களுக்கு கிடைத்திருக்கும் பெரும் தோல்வி ஆகும். அந்த தோல்வியே இவர்களை கருத்து சுதந்திரம் என்ற பெயரில் இத்தகைய வீணான செயலைச் செய்யத் தூண்டுகிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று, நினைவில் கொள்ளுங்கள்! இம்மக்கள் தமது சமுதாயத்திற்கும்கூட நன்மையை விரும்புபவர்களல்லர். இவ்விசயம் ஒருநாள் அந்த சமுதாய மக்களிடமே வெட்ட வெளிச்சமாகும்; தெளிவாகும். இவர்கள் இன்று செய்கின்ற வீணான செயல்கள் அவர்தம் சமுதாயத்திற்கே நஷ்டம் தருபவையாகும். இவர்கள் சுயநலவாதிகளும் அநீதியிழைப்பவர்களும் ஆவர். தமது விருப்பங்களை நிறைவேற்றுவதை விட வேறு எந்த குறிக்கோளும் அவர்களுக்கு இல்லை.

இப்போது கருத்து சுதந்திரம் என்ற பெயரில் அரசியல்வாதிகளும், மற்ற துறையினரும் சில இடங்களில் மிகவும் வெளிப்படையாகவும், பெரும்பாலும் மறைமுகமாகவும், அவர்களுக்கு சாதகமாக பேசுகின்றனர். சிலவேளை முஸ்லிம்களுக்கு சாதகமாக



பேசுகின்றனர். ஆனால் நினைவில் கொள்ளுங்கள்! உலகம் எத்தகைய சர்வதேச கிராமமாக (Global Village) ஆகிவிட்டது எனில், பகிரங்கமாக தீயதை தீயது என்று கூறாவிட்டால், இந்த விசயங்கள் இந்த நாடுகளின் அமைதியையும் நிம்மதியையும் சீர்குலைத்து விடும். இறைவனின் பிரம்பு செயல்படத் தொடங்கும் என்பது வேறு விசயம். காலத்தின் இமாமின் வார்த்தையை நினைவில் கொள்ளுங்கள். ஒவ்வொரு வெற்றியும் வானத்திலிருந்து வருகிறது. வானமே ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. நீங்கள் எந்த ரஸுலை இழிவுபடுத்த முயற்சிக்கின்றீர்களோ அவர்தான் உலகில் வெற்றி பெறப்போகிறார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுவது போன்று அந்த வெற்றி உள்ளங்களை வெற்றி கொள்வதால் வரப்போகிறது. ஏனெனில் தூய வார்த்தைக்கு ஒரு தாக்கம் உள்ளது. தூய வார்த்தையைக் கூறுவதற்கு கடுமையைப் பயன்படுத்த தேவையில்லை. தீய வார்த்தைக்கு தீய வார்த்தையால் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை. தீய சொற்களை, தீய செயல்களை இவர்கள் தொடங்கியுள்ளார்கள். இது விரைவில் முடிந்து விடும் இன்சா அல்லாஹ். பிறகு இந்த வாழ்வுக்குப் பிறகு இறைவன் இம்மக்களை பார்த்துக் கொள்வான்.

நான் ஓதிய திருக்குர்ஆன் வசனத்தில் இறைவன் மூஃமின்களுக்கு அவர்களது பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டியுள்ளான். உங்கள் வேலை இந்த ரஸுலின் மீது தரூதும் ஸலாமும் ஓதுவதாகும். இம்மக்களின் தீய வார்த்தைகள், அநீதிகள், எள்ளிநகையாடல்கள் மூலம் அந்த மகத்தான நபியின் கண்ணியத்திற்கு எந்தப் பங்கமும் ஏற்படாது. அவர்கள் எத்தகைய மகத்தான நபி எனில் அவர்கள் மீது இறைவனும் அவனது மலக்குகளும் கூட தரூது ஓதுகின்றனர். மூஃமின்களின் வேலை தமது நாவுகளை இந்த நபியின் மீது ஸலவாத் ஓதுவதன் மூலம் ஈரமாக வைத்திருக்க வேண்டும். எதிரிகள் வீணான செயல்களில் ஈடுபட ஈடுபட நாம் முன்னரை விட அதிகமாக தரூது, ஸலவாத் ஓத வேண்டும். **அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லய்த்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத்.**

இந்த தரூது தான், இந்த நபிதான் உலகில் வெற்றி பெறுவார்கள் என்பது விதிக்கப்பட்டு விட்டது. ஓர் அஹ்மதி முஸ்லிம் இந்த வீணான வார்த்தைகள் மீது தமது வெறுப்பையும் வேதனையையும் வெளிப்படுத்தும் அதே வேளையில், தத்தமது நாடுகளின் முக்கியப் பிரமுகர்கள் அரசியல்வாதிகளிடம் இந்த வீணான காரியத்திலிருந்து தவிர்ந்திருப்பது மற்றும் தடுப்பதன் பக்கம் கவனமூட்ட வேண்டும். உலகரீதியாகவும் ஓர் அஹ்மதி இந்த சதிக்கு எதிராக உண்மையை உலகிற்கு உணர்த்தவும் முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது வாழ்வின் அழகிய அம்சத்தை எடுத்துக் காட்டுங்கள். அவர்களின் அழகிய முன்மாதிரியை ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுத்தி அவர்களது அழகிய முன்மாதிரியின் செயல் வடிவமாக ஆகிக் காட்டுங்கள். ஆயினும், நான் ஏற்கனவே கூறியது போன்று அத்துடன் முன்பை விட அதிகமாக தரூது ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். ஆண்கள், பெண்கள், வாலிபர்கள், வயோதியர்கள், குழந்தைகள் தமது சுற்றுப்புறத்தையும் இயற்கை சூழலையும் தரூது மற்றும் ஸலாத்தால் நிரப்புங்கள். தமது செயலை இஸ்லாமிய போதனையின் செயல் வடிவிலான முன்மாதிரியாக்குங்கள். இதுவே அழகிய எதிர்நடவடிக்கை ஆகும். இதனையே நாம் செய்து காட்ட வேண்டும். இந்த அநீதி இழைப்பவர்களின் முடிவைப் பற்றி இறைவன் இரண்டாவது வசனத்தில் கூறுகின்றான்.

ரஸுலுக்கு துன்பம் ஏற்படுத்த விரும்புபவரை, ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களை இழிவுபடுத்தி, இக்காலத்தில் உண்மையான மூஃமின்களின் உள்ளத்தை வேதனைப்படுத்தி சல்லடை ஆக்குபவர்களை இறைவன் தானே பார்த்துக் கொள்வான். இவ்வுலகிலும் அல்லாஹ்வின் சாபம் அவர்கள் மீது இறங்குகிறது. இந்த சாபத்தின் காரணமாக அவர்கள் இன்னும் அதிகமாக அசுத்தத்தில் மூழ்கி விடுவர். மரணத்திற்குப் பிறகு அத்தகையோருக்கு இறைவன் இழிவுபடுத்தும் தண்டனையை நிர்ணயித்துள்ளான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இக்கருத்தைத்தான் கூறினார்கள். அத்தகைய தீயவர்களின் முடிவு நன்றாக இருக்காது. எனவே, இவ்வுலகில் இறை சாபத்தின் வடிவிலும் மரணத்திற்குப் பிறகு இழிவுதரும் தண்டனை என்ற வடிவிலும் இம்மக்கள் தமது முடிவை அடைவார்கள்.



மற்ற முஸ்லிம்கள் கூட இறைவனின் போதனைக்கேற்ப, கட்டளைக்கேற்ப எதிர்நடவடிக்கை எடுக்க வேண்டும். தமது நாடுகள், தமது வட்டங்கள், தமது சுற்றுப்புறங்கள் ஆகியவற்றை தரூதினால் நிரப்புங்கள். இதுவே எதிர்நடவடிக்கையாகும். உங்கள் நாட்டிலேயே உங்கள் சொத்துகளுக்கே நெருப்பு வைப்பது அல்லது சொந்த நாட்டின் குடிமக்களை கொல்வது அல்லது ஊர்வலம் நடத்துவது போன்றவை பயனற்ற எதிர்நடவடிக்கையாகும். அதனால் காவல்துறையினரும் நிர்பந்தத்தினால் தமது நாட்டு மக்களின் மீதே துப்பாக்கிச்சூடு செய்ய வேண்டியது வருகிறது. இதனால் நமது மக்களே மரணிக்கின்றனர். பத்திரிகைகள், ஊடகங்கள் மூலம் வெளிவருகிற செய்திகள் மூலம் தெரிய வருவதாவது, பெரும்பாலான நல்ல இயல்புள்ள மேற்கத்திய மக்கள் இந்த செயலுக்காக தமது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்; வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளனர். எவர்கள் முஸ்லிம்கள் இல்லையோ, ஆயினும் இயல்பில் எவர்களிடம் நேர்மை இருக்கின்றதோ அவர்கள் இங்கும், அமெரிக்காவிலும் இதை விரும்பவில்லை.

ஆனால், தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் ஒருபுறம் இது தவறு என்று கூறுகின்றனர். மறுபுறம் கருத்து சுதந்திரம் என்ற சாக்கில் இதற்கு ஆதரவும் தருகின்றனர். இந்த இரட்டை செயல்முறை சரியல்ல. பேச்சு அல்லது கருத்து சுதந்திரம் குறித்த சட்டம் என்பது வானத்தின் வேதங்கள் அல்ல. நான் அமெரிக்காவின் அரசியல்வாதிகளுக்கு எனது சொற்பொழிவில் இதனையும் கூறினேன். உலகவாதிகளால் உருவாக்கப்பட்ட சட்டத்தில் குறை ஏற்படலாம்; தவறு இருக்கலாம். சட்டம் இயற்றும் போது சில அம்சங்கள் பார்வையிலிருந்து மறைந்திருக்கலாம். ஏனெனில் மனிதன் மறைவானவற்றை அறிய முடியாது. ஆனால் அல்லாஹ்வோ ஆலிமுல் கைப் – மறைவானவற்றை அறிபவன் ஆவான். அவனால் உருவாக்கப்பட்ட சட்டத்தில் குறைபாடு இருப்பதில்லை.

எனவே, உங்கள் சட்டத்தை மாற்றத்தகாத அத்தகைய முழுமையான சட்டம் என்று கருதாதீர்கள். கருத்து சுதந்திரமுடைய சட்டம் உள்ளதுதான். ஆனால் எந்த நாட்டின் சட்டத்திலும், UNO –ன் சட்டத்திலும் மற்றவரின் மார்க்க உணர்வை காயப்படுத்த ஒருவருக்கு சுதந்திரம் கிடையாது என்று எந்த சட்டத்திலும் இல்லை. மற்ற மார்க்கப் பெரியவரை கேலி கிண்டல் செய்ய அனுமதி கிடையாது என்று எங்கும்

எழுதப்படவில்லை. இதனால் உலகின் அமைதி அழிகிறது. இதனால் வெறுப்புகள் என்னும் அக்கினிக் குழம்புகள் கொதிக்கின்றன. இதனால் நாடுகள், மார்க்கங்களுக்கிடையில் விரிசல் அதிகரிக்கின்றது.

எனவே சுதந்திரத்திற்கான சட்டத்தை இயற்ற வேண்டும் என்றால் சந்தேகமின்றி தனிநபரின் சுதந்திரத்திற்கான சட்டத்தை இயற்றுங்கள். ஆனால் அதே வேளையில் பிறருடைய உணர்வுடன் விளையாடுவதற்கான சட்டத்தை இயற்றாதீர்கள். UNO –வும் கூட இதனால்தான் தோல்வியடைந்து கொண்டிருக்கிறது. தோல்வியடையும் சட்டத்தை உருவாக்கி விட்டு நாம் பெரிய வேலை செய்து விட்டோம் என்று கருதுகின்றனர். ஆனால் அல்லாஹ்வுடைய சட்டத்தை கவனியுங்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்: மற்றவர்களின் சிலைகளைக் கூட ஏசாதீர்கள். இதனால் சமுதாயத்தின் அமைதிக்கு பங்கம் ஏற்படுகிறது. நீங்கள் சிலைகளை ஏசினால் அவர்கள் அறியாமல் எல்லா வல்லமையும் உள்ள உங்கள் அல்லாஹ்வை நோக்கி தகாத வார்த்தைகளைக் கூறுவார்கள். இதனால் உங்கள் உள்ளங்களில் துக்கம் ஏற்படும். உள்ளங்களில் காழ்ப்புணர்ச்சி அதிகரிக்கும். சண்டை சச்சரவுகள் ஏற்படும். நாட்டில் குழப்பம் ஏற்படும். எனவே, இதுவே அழகிய போதனையாகும்.

ஆக, இது இஸ்லாத்தின் இறைவன் தந்த அழகிய போதனையாகும். இந்த உலகின் இறைவன் தந்துள்ளான்; இந்த பிரபஞ்சத்தின் இறைவன் தந்துள்ளான். எந்த இறைவன் தனது முழுமையான போதனையுடன் தனது அன்பிற்குரிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை, உலகை சீர்திருத்துவதற்காகவும், உலகில் அன்பையும் நேசத்தையும் நிலைநாட்டுவதற்காகவும் அனுப்பியுள்ளானோ, எந்த இறைவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு ரஹ்மத்துல் லில் ஆலமீன் என்ற பட்டத்தை வழங்கி, எல்லா படைப்பினங்களுக்கும் ரஹ்மத் ஆக்கி அனுப்பியிருக்கிறானோ அந்த இறைவன் இந்த போதனையை தந்துள்ளான்.

எனவே, உலகின் படித்தவர்கள், ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள் ஆகியோர் இந்த சில வீணர்களை கடுமையாக தடுத்து அடக்காமல் நீங்கள் இந்தக் குழப்பத்தில் பங்கு பெறுகிறீர்களா? என சிந்தியுங்கள். உலகின் பொதுமக்கள் சிந்திக்க வேண்டும். மற்றவரின்



மார்க்க உணர்வுடன் விளையாடி, உலகின் புழுக்கள் மற்றும் அசுத்தத்தில் மூழ்கியுள்ள மக்களுடன் சேர்ந்து அவர்களுக்கு ஆமாம் போட்டுக் கொண்டு, நீங்களும் உலக அமைதிக்கு குந்தகம் விளைவிப்பதில் பங்குதாரர் ஆகிவிடவில்லையே!

அஹ்மதி முஸ்லிம்களாகிய நாம் உலகிற்கு தொண்டாற்ற எந்த வாய்ப்பையும் விட மாட்டோம். கடந்த வருடம் அமெரிக்காவில் இரத்தத்தின் தேவை ஏற்பட்ட போது, 12,000 பாட்டில்களை அஹ்மதிகள் ஒன்றுதிரட்டிக் கொடுத்தனர். இவ்வருடமும் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய நாட்களில் இதற்கான பணி நடந்து கொண்டிருக்கின்றது. அவர்களிடம் நான் கூறினேன். அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள், வாழ்வு தருவதற்காக இரத்தம் தருகிறோம். நீங்கள் இந்த உங்கள் நடவடிக்கையில் இவ்வாறு செய்பவர்களுக்கு ஆமாம் போட்டுக் கொண்டு எங்களது உள்ளத்தினை காயப்படுத்துகின்றீர்களா? இதுவே ஓர் அஹ்மதி முஸ்லிமின் செயல் ஆகும். ஓர் உண்மையான முஸ்லிமின் செயலும் ஆகும்.

நாம் நீதியை நிலைநாட்டுபவர்கள் என்று இம்மக்கள் கருதிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவர்களில் ஒரு பிரிவினரின் செயல் இதுவாகும். முஸ்லிம்களின் மீது, அவர்கள் தவறு செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறது. சரிதான். சில எதிர்நடவடிக்கைகள் தவறுதான். உடைத்து நொறுக்குதல், தீயிட்டு கொளுத்துதல், அபகரித்தல், அப்பாவி மக்களை கொல்லுதல், அந்நிய நாட்டு தூதுவர்களை பாதுகாக்காமல் இருப்பது, அவர்களைக் கொல்வது, அடிப்பது ஆகிய அனைத்தும் தவறுதான். ஆனால் அல்லாஹ்வுடைய மாசற்ற நபியை ஏளனம் செய்வது, தீய வார்த்தைகளால் பேசுவதில் முந்திச் செல்வது இதுவும் மிகப்பெரும் பாவமாகும். ஒருவரைப் பார்த்து இன்னொருவர் என கடந்த நாட்களில் பிரான்ஸில் ஒரு பத்திரிகைக்கும் மீண்டும் துணிச்சல் வந்தது. அதுவும் ஒரு வீணான கார்ட்டூன் ஒன்றை வெளியிட்டுள்ளது. இதுவும் முன்பை விட மோசமான வீண் செயலாகும். இந்த உலகவாதிகள், உலகமே எல்லாம் என்று கருதுகின்றனர். ஆனால் இந்த உலகம் தான் இவர்களின் அழிவுக்கும் காரணமாகும் என்று இவர்கள் அறிவதில்லை.

இங்கு நான் இதனையும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். உலகில் பெரும் பரப்பளவில் முஸ்லிம் ஆட்சிகள் நிறுவப்பட்டுள்ளன.

உலகிலுள்ள பல பகுதிகள் முஸ்லிம்களின் கீழ் இருந்து வருகிறது. பெரும்பாலான முஸ்லிம் நாடுகளுக்கு இறைவன் இயற்கை வளங்களை வழங்கியுள்ளான். முஸ்லிம் நாடுகள் UNO –ல் அங்கமும் வகிக்கின்றன. திருக்குர்ஆன் முழுமையான வாழ்க்கை நெறியாக விளங்குகிறது. இதனை ஒப்புக் கொண்டவர்கள் அதனைப் படிப்பவர்கள் இந்த அழகிய போதனையை உலகின் எல்லாப் புறத்திலும் வெளிப்படுத்துவதற்கு இந்த முஸ்லிம் அரசுகள் ஏன் முயலவில்லை? ஏன் இதனை செய்வதில்லை? மார்க்க உணர்வுடன் விளையாடுவது, நபிமார்களை அவமரியாதை செய்வது அல்லது அதற்காக முயலுவதும் கூட திருக்குர்ஆனின் போதனைக்கேற்ப குற்றச்செயல் ஆகும்; அது மிகப்பெரிய பாவமாகும் என்று ஏன் உலகின் முன் எடுத்து வைக்க முயலுவதில்லை. அது மிகப்பெரிய குற்றமும் பாவச் செயலும் ஆகும். உலகின் அமைதிக்கு இவ்விசயத்தையும் UNO –ல் ஓர் அங்கமாக ஆக்குவது அவசியமானதாகும். அதன் உறுப்பு நாடுகள், தனது எந்த குடிமகனுக்கும் மற்றவரின் மார்க்க உணர்வுடன் விளையாட அனுமதிக்கக் கூடாது. கருத்து சுதந்திரம் என்ற பெயரில் உலகின் அமைதிக்கு குந்தகம் விளைவிக்க அனுமதிக்கப்படமாட்டாது என்று சட்டம் இயற்ற வேண்டும்.

ஆனால் அந்தோ பரிதாபம்! எவ்வளவு நாட்களாக இவையெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது? ஹஸ்ரத் நபி (ஸல்) மற்றும் பிற எல்லா நபிமார்கள் குறித்தும் அவர்களின் கண்ணியத்தை சீர்குலைக்கும் செயல் குறித்தும் உலகை எச்சரிக்க வேண்டும் எனவும், உலக நாடுகள் அளவில் இதனை ஏற்கச் செய்ய வேண்டும் எனவும், முஸ்லிம் நாடுகளின் ஒட்டுமொத்தமான வலுவான முயற்சி ஒருபோதும் நடைபெறவில்லை. UNO –ன் பிற தீர்ப்புகள் போன்று இதுவும் செயல்படப் போவதில்லை. முந்தைய எந்த சட்டத்தின்படி செயல் நடைபெறுகிறது? ஆயினும் குறைந்தபட்சம் இவ்விசயம் பதிவேட்டிலாவது வந்து விடும். O.I.C - Organisation of Islamic Countries என்ற அமைப்பு உள்ளதுதான். ஆயினும் இதன் மூலமாக ஒருபோதும் முஸ்லிம் மக்களுக்காக எந்த ஆக்கப்பூர்வமான முயற்சியும் எடுக்கப்படவே இல்லை. உலகில் முஸ்லிம்களின் மதிப்பு நிலைபெறத்தக்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. முஸ்லிம் நாடுகளின் அரசியல்வாதிகள் தமது விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு முயற்சியும் செய்து



கொண்டிருக்கிறார்கள். மார்க்கத்தின் மகத்துவம் பற்றிய கவனம் இல்லை. நமது தலைவர்கள் தரப்பிலிருந்து வலுவான முயற்சிகள் இருந்தால் பொதுமக்கள் தரப்பிலிருந்து இந்த தவறான எதிர்நடவடிக்கைகள் கூட வெளிப்பட்டு இருக்காது. உதாரணமாக, இன்று பாகிஸ்தானில் நடக்கின்ற அல்லது மற்ற நாடுகளில் நடந்த எதிர்நடவடிக்கைகள் போன்று நடக்காமல் இருந்திருக்கும்.

நமது தலைவர்கள் இந்தப் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அதற்கான உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்வர். தமது தலைவர்கள் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் கண்ணியத்தையும், மதிப்பையும் நிலைநாட்டுவதற்காக மற்ற அனைத்து தூதர்களின் கண்ணியத்தையும், மதிப்பையும் நிலைநாட்டுவதற்காக இவர்கள் சொல்வது உண்மைதான் என இந்த உலகம் ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் அளவுக்கு அவர்கள் உலக மன்றத்தில் கிளர்ந்தெழுவார்கள் என்பது அவர்களுக்கு தெரியும்.

பிறகு மேற்கத்திய நாடுகளிலும் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் வாழும் முஸ்லிம்களின் எண்ணிக்கை பெருமளவு ஆகும். உலகில் முஸ்லிம்கள் மதத்தின் அடிப்படையிலும் எண்ணிக்கையின் அடிப்படையிலும் இரண்டாவது பெரிய சக்தியாக உள்ளனர். இவர்கள் இறை கட்டளையின்படி செல்வார்கள் எனில் எல்லா நிலையிலும் இவர்களே பெரும் ஆற்றலாக மாற முடியும். இந்நிலையில் இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகளுக்கு உள்ளத்தினை வேதனைப்படுத்தும் இதுபோன்ற செயல்களைச் செய்ய தைரியம் வராது. அல்லது இந்த எண்ணம் கூட வராது. எவ்வாறிருப்பினும் முஸ்லிம் நாடுகளின், நாடுகள் தவிர, உலகின் ஒவ்வொரு நாடுகளிலும் முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

ஐரோப்பாவில் மில்லியன் கணக்கில் துருக்கியர்களே வாழ்கின்றனர். வெறும் ஐரோப்பாவில் மட்டுமல்ல. ஐரோப்பாவின் ஒவ்வொரு நாட்டிலும் மில்லியன் கணக்கில் வாழ்கின்றனர். இதனைப் போன்று பிற முஸ்லிம் சமுதாயங்களும் இங்கு வாழ்கின்றனர். ஆசியாவிலிருந்து முஸ்லிம்கள் இங்கு வந்திருக்கின்றார்கள். U.K., U.S.A., கனடா என அனைத்து பகுதிகளிலும் முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். ஐரோப்பாவின் அனைத்துப் பகுதிகளிலும்

வாழ்கின்றார்கள். இவர்கள் அனைவரும் முடிவு செய்து அவர்கள் தமது வாக்குரிமையை (Vote) மார்க்க நல்லிணக்கத்தைப் பேணுகின்ற அரசியல்வாதிகளுக்கே வழங்குவதாக முடிவு செய்தால், அதுவும் நாவளவில் உறுதி அளிக்காமல் செயலளவில் காட்டக்கூடிய இப்படிப்பட்ட விரும்பத்தகாத பேச்சுக்களை அல்லது வீண் பேச்சுக்களை உளறுபவர்களை அல்லது ஃபிலிம் தயாரிப்பவர்களை கண்டிப்போம் என உறுதிமொழி வழங்குபவருக்கு தம் வாக்குரிமையை தருவதாக முடிவு செய்தால், இந்த உலக அரசுகளிலேயே பகிரங்கமாக இந்த வீணானவற்றிற்கு எதிரான தமது கருத்தை வெளியிடுகிற ஒரு பிரிவு கிடைத்து விடுவார்கள். எனவே முஸ்லிம்கள் தமது முக்கியத்துவத்தை விளங்கிக் கொண்டால், உலகில் ஒரு புரட்சி ஏற்பட முடியும். அவர்கள் நாட்டிற்குள் மார்க்க உணர்வுக்கு மதிப்பளிக்கும் சட்டம் கொண்டு வர இயலும். ஆனால் இதன் பக்கம் கவனம் இல்லாதிருப்பது துரதிஷ்டமாகும்.

அஹ்மதிய்யா ஜமாஅத் இதன் பக்கம் கவனமூட்டினால் அதனை எதிர்ப்பதற்கு உறுதியாக நிற்கிறார்கள். எதிரியின் கரத்திற்கு வலு சேர்க்கின்றனர். அல்லாஹ் முஸ்லிம் தலைவர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், ஆலிம்களுக்கும் அறிவை வழங்குவானாக! அவர்கள் தமது ஆற்றலை உறுதிப்படுத்தட்டும்! தமது முக்கியத்துவத்தை உணரட்டும்! தமது போதனையின் பக்கம் கவனம் செலுத்தட்டும்!

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது முட்டாள்தனமான ஆட்சேபனை செய்கின்ற குற்றச்சாட்டுகளைக் கூறுகின்ற இம்மக்கள் இந்த ஃபிலிமை தயாரித்துள்ளவர்கள் அல்லது இதற்காக பணிபுரிந்தவர்களின் ஒழுக்கங்களின் தரத்தைப் பற்றி ஊடகங்கள் தருகின்ற கருத்துக்களிலிருந்தே மதிப்பிடலாம். இதில் முக்கிய பங்கு வகிப்பவர் ஒரு எகிப்திய கிறித்தவர். இவர் அமெரிக்காவில் வசிக்கிறார். Nakoula Bassley (நகோலா பாஸ்லி) என்பது இவரது பெயராகும் அல்லது சாம்பஸ்லி என்றும் கூறுகின்றார்கள். இதனைப் போன்ற ஒரு பெயராகும். இவர் கிரிமினல் பின்னணி உள்ளவர். குற்றவாளி. ஏமாற்றியதன் விளைவாக 2010-ல் இவர் சிறை சென்றவர். இரண்டாவது நபர் இந்த ஃபிலிமின் டைரக்டர். இவர் ஃபோனோகிராபி



ஃபிலிம்களை தயாரிக்கும் டைரக்டர் ஆவார். இதில் நடித்த நடிகர்கள் அனைவரும் ஃபோனோகிராபி ஃபிலிம்களில் நடிப்பவர்கள் ஆவர். இதுவே இவர்களது ஒழுக்கத்தின் தரமாகும். ஃபோனோகிராபியின் எல்லைகளை மனிதன் சிந்திக்க கூட முடியாது. எத்தகைய அசுத்தத்தில் இம்மக்கள் மூழ்கியுள்ளனர். எத்தகைய மனிதரின் உயர் நல்லொழுக்கம் குறித்தும் தூய்மை குறித்தும் இறைவனே சாட்சி கூறியுள்ளானோ அத்தகையவர் மீது ஆட்சேபனை செய்ய கிளம்பி விட்டனர்.

எனவே இவ்வாறு இவர்கள் தமது தரக்குறைவான செயல் செய்து இறைவனது தண்டனையை அழைத்திருக்கிறார்கள். அழைத்துக் கொண்டு செல்கிறார்கள். அதுபோன்று இந்தப் படத்தின் ஸ்பான்ஸர் கூட இறை தண்டனையில் இருந்து தப்பிக்க முடியாது. அதில் ஒரு கிறித்தவ பாதிரியும் அடங்குவார். இவர் அமெரிக்காவில் தனது அற்பமான புகழுக்காக திருக்குர்ஆனை எரிப்பதற்கும் முயற்சி செய்து கொண்டிருந்தவர்.

அல்லாஹூம்ம மஸ்ஸிக்ஹூம் குல்ல முமஸ்ஸக்கின் வஸஹ்ஹிக்ஹூம் தஸ்ஹீகா.

சில மீடியாக்கள் கண்டிக்க முயன்றுள்ளன. அத்துடன் அவை முஸ்லிம்களின் எதிர்நடவடிக்கையையும் சேர்த்து கண்டித்துள்ளன. தவறான எதிர்நடவடிக்கையை கண்டிக்க வேண்டியதுதான். ஆனால் இதனை ஆரம்பித்தவர் யார் என்றும் பார்க்க வேண்டும். எவ்வாறிருப்பினும் நான் ஏற்கனவே கூறியது போன்று, இவை அனைத்தும் முஸ்லிம்களிடம் ஒருமைப்பாடும், தலைமைத்துவமும் இல்லாததன் காரணமாகத்தான் ஏற்படுகின்றன என்பது முஸ்லிம்களின் துரதிஷ்டமாகும்.

ரஸூலின் மீது அன்பு இருப்பதாக வாதம் செய்தாலும் கூட இவர்கள் மார்க்கத்தை விட்டு விலகியே உள்ளனர். வாதம் கண்டிப்பாக செய்கின்றனர். ஆனால் மார்க்க அறிவு சிறிதும் இல்லை. உலகரீதியாகவும் பலவீனமாகிக் கொண்டே செல்கின்றனர். எந்த முஸ்லிம் நாடும் மற்றொரு நாட்டிற்காக உறுதியாக கண்டனம் தெரிவிக்கவில்லை. கண்டனம் தெரிவித்தாலும் மிகவும் பலவீனமாகவே கண்டிக்கிறது. எந்த அளவுக்கு எனில் மீடியாக்கள்

அதற்கு எந்த முக்கியத்துவமும் தரவில்லை. முஸ்லிம்கள் போராட்டங்கள் நடத்தியதாக செய்திகள் வெளி வந்தாலும் 1.8 மில்லியன் முஸ்லிம்கள் குழந்தைகளைப் போன்று எதிர்நடவடிக்கை எடுக்கின்றனர் என்று செய்தி வெளியிட்டுள்ளனர். பராமரிப்பவர் இல்லை எனில் அங்குமிங்கும் சுற்றித்திரிபவர்களாகத்தான் இருப்பார்கள். பிறகு எதிர்நடவடிக்கையும் கூட குழந்தைத்தனமாகவே இருக்கின்றன.

ஒரு விதத்தில் கேலிக்குரியதாக ஆக்கி விட்டனர். ஆனால் உண்மையையும் தெளிவுபடுத்தி விட்டனர். இப்போதாவது முஸ்லிம்கள் வெட்கப்பட வேண்டும். இறைவன் அவர்களுக்கு நல்லறிவை வழங்குவானாக! இம்மக்களின் மார்க்கக் கண்களோ குருடாக உள்ளன. இவர்களுக்கு நபிமார்களின் அந்தஸ்து தெரியாது. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களுடைய மதிப்பையும் கூட வீழ்த்தி விட்டு அமைதியாக இருக்கிறார்கள். முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக உணர்வைக் காட்டுவது இவர்களுக்கு குழந்தைகளின் எதிர்நடவடிக்கை போன்று தென்படும். எவ்வாறிருப்பினும் நான் கூறியதுபோன்று 2006 -லும் இதனை கவனமூட்டியிருந்தேன். இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். மிக உறுதியான ஒரு செயல்திட்டம் ஒன்றை உருவாக்குங்கள். அதன் மூலம் வருங்காலத்தில் யாருக்கும் இதுபோன்று வீணானவற்றை செய்ய தைரியம் வரக்கூடாது. அந்தோ! இன்றைய முஸ்லிம் நாடுகள் இதைக் கேட்க வேண்டும். அவர்கள் வரை கொண்டு சேர்க்க ஒவ்வொரு அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். நான்கு நாட்கள் போராட்டம் நடத்திவிட்டு உட்கார்ந்து விடுவதால் இப்பிரச்சனை தீராது. பிறகு இன்னொரு ஆலோசனையும் வந்தது. மக்கள் பல்வேறு ஆலோசனைகளை அனுப்பிக் கொண்டிருக்கின்றனர்.

உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம் வக்கீல்கள் ஒன்றுசேர்ந்து மனு கொடுக்க வேண்டும். அந்தோ முஸ்லிம் வக்கீல்கள் சர்வதேச அந்தஸ்துள்ள வக்கீல்கள் இது தொடர்பாக சிந்திக்க வேண்டும். இதன் சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்ய வேண்டும். அது நடக்க முடியுமா? இல்லையா? என்பதைப் பார்க்க வேண்டும். அல்லது வேறு ஒருவழியை உருவாக்குங்கள். எதுவரை இந்த வீணான காரியத்தை பார்த்துக் கொண்டு இருக்க முடியும்? தமது நாடுகளில் ஒரு கண்டனத்தை



தெரிவித்து விட்டு அல்லது உடைத்து நொறுக்கி விட்டு அமர்ந்து விட்டால் மேற்கத்திய நாடுகளில் இதனால் எந்த விளைவும் ஏற்படாது அல்லது இதனை (ஃபிலிம்) தயாரிப்பவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. அந்த நாடுகளின் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் தொடுப்பீர்கள் எனில், மிரட்டுவீர்கள் எனில் அல்லது அடிக்க முயற்சி செய்வீர்கள் எனில், தூதரகங்கள் மீது தாக்குதல் தொடுப்பீர்கள் எனில் இது இஸ்லாமிய போதனைக்கு மாற்றமானதாகும். இஸ்லாம் அதற்கு ஒருபோதும் அனுமதி தருவதில்லை. அத்தகைய நிலையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது நீங்களே ஆட்சேபனை செய்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து விடுவீர்கள். எனவே கடுமை காட்டுதல் இதற்கு பதில் அல்ல. இதற்கு பதில் நான் ஏற்கனவே சொல்லி வந்ததுதான். நமது செயல்களை சீர்திருத்துவதும், மனித குலத்திற்கு ஈடேற்றம் தருகிற அந்த நபியின் மீது தரூது மற்றும் ஸலாம் ஓதுவதாகும். மேலும் உலக முயற்சிகளுக்காக முஸ்லிம் நாடுகள் ஒன்றுபடுவதும் ஆகும். மேற்கத்திய நாடுகளில் வசிக்கும் முஸ்லிம்கள் தமது வாக்குரிமை சக்தியை சரியாக பயன்படுத்துவதும் ஆகும்.

எனவே ஜமாஅத்தார்கள் எங்கிருந்தாலும் அவர்கள் இந்த கோணத்தில் இப்பணியைச் செய்ய வேண்டும். மேலும் அஹ்மதியல்லாத நண்பர்களும் தமது சக்தியை, அந்நாடுகளில் உள்ள மக்களின் வாக்குரிமை சக்தியை சரியாக பயன்படுத்த முயற்சி செய்யுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய வாழ்வின் அம்சங்களை உலகின் முன் எடுத்து வையுங்கள். இன்று இம்மக்கள் கருத்து சுதந்திரம் என்று கூச்சலிடுகின்றனர். இஸ்லாத்தில் கருத்து சுதந்திரமும் பேசுவதற்கான உரிமையும் இல்லை என்று கூச்சலிட்டு, இக்கால முஸ்லிம் நாடுகளை அதற்கு உதாரணமாக தருகின்றனர். முஸ்லிம் நாடுகளிலுள்ள குடிமக்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை என்கின்றனர். கிடைக்கவில்லை என்றால், அது இஸ்லாமிய போதனையின்படி செயல்படாததால் அந்நாடுகளுக்கு கிடைத்த துர்பாக்கியம் ஆகும். அதற்கு இஸ்லாமிய போதனையுடன் அங்கு எந்த தொடர்பும் இல்லை. மக்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் தங்கு தடையின்றி பேசியது, மேலும் மக்கள் கண்ணியக்குறைவாக நடந்தது; அவ்வாறிருந்தும், அன்னார் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை

மேற்கொண்ட அப்படிப்பட்ட சம்பவங்களைப் பார்க்கும் போது அதற்கு நிகராக உலகில் உதாரணம் கூறவே முடியாது.

நான் சில உதாரணங்களை எடுத்து வைக்கிறேன். இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய வள்ளல்தன்மையைக் காட்டுவதற்காக எடுத்து வைக்கப்படுகிறது. என்றபோதிலும் அந்த சம்பவங்களில் விசமத்தன்மையில் அளவுகடந்த நிலையிலும் அதற்கெதிரில் அன்னார் காட்டிய தீரம் பற்றியும் வெளிப்படுகின்றன.

ஹஸ்ரத் ஜுபைர் பின் முத்அம் அவர்களின் அறிவிப்பில் வருகிறது. ஒருமுறை அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார். அன்னாருடன் இன்னும் பலர் இருந்தனர். அவர்கள் ஹுனைனிலிருந்து வந்து கொண்டிருந்தார்கள். காட்டரபிகள் அன்னாரை சுற்றிவளைத்துக் கேட்டுக் கொண்டிருந்தனர். எந்த அளவுக்கு ஒதுங்கும் கட்டாயத்திற்கு உள்ளானார்கள் என்றால், ஒரு பபுல் மரத்தின் பக்கம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நெருங்கி விட்டார்கள். அம்மரத்தின் முள்ளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சால்வை மாட்டிக் கொண்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நின்று விட்டார்கள். எனது சால்வையை எனக்கு கொடுங்கள். என்னிடம் இந்த காட்டிலுள்ள மரங்களின் எண்ணிக்கைக்கு சமமாக ஒட்டகங்கள் இருந்தாலும் அதனை நான் உங்களுக்கு பங்கிட்டு தந்திருப்பேன். அந்நிலையிலும் பிறகு நீங்கள் என்னை கருமியாகவோ, பொய்யராகவோ, கோழையாகவோ காணமாட்டீர்கள் என்று கூறினார்கள்.

(ஆதாரம் : புகாரி கிதாப் ஃபர்முல் கம்ஸ் ஹதீஸ் எண் 3148)

இன்னொரு அறிவிப்பு ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களுடையதாகும். நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தேன். அவர்கள் ஒரு கனத்த விளிம்புகளை உடைய சால்வையை போர்த்தியிருந்தார்கள். ஒரு காட்டரபி அந்த சால்வையை வேகமாக இழுத்தார். இதனால் அந்த சால்வையின் அடையாளம் அவர்களின் கழுத்தின் மீது விழுந்து விட்டது. பிறகு, முஹம்மதே (ஸல்)! அல்லாஹ் உமக்கு வழங்கிய செல்வத்திலிருந்து எனது இந்த இரு ஒட்டகங்கள் மீது ஏற்றி தாருங்கள். நீர் உம்முடைய பொருளிலிருந்தோ உமது தகப்பனாரின் பொருளிலிருந்தோ தரப் போவதில்லை. முதலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அமைதியாக இருந்தார்கள். பிறகு



கூறினார்கள்: *அல்மாலு மாலுல்லாஹி வஅனா அப்துஹு* - செல்வம் அல்லாஹ் உடையதுதான். நான் அவனது அடியான் ஆவேன். பிறகு நீர் என்னை துன்பப்படுத்தியுள்ளீர். அதற்காக உம்மிடம் பழிவாங்கப்படும் என்றார்கள். அதற்கு அந்தக் காட்டரபி இல்லை என்றார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் உம்மிடம் ஏன் பழிவாங்கக் கூடாது என்றார்கள். அதற்கு அந்த காட்டரபி, நீங்கள் தீமைக்கு தீமை மூலமாக பழிவாங்கமாட்டீர்கள் என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சிரித்தார்கள். பிறகு கூறினார்கள்: ஒரு ஒட்டகத்தின் மீது சோளமும் இன்னொரு ஒட்டகத்தின் மீது பேரீத்தம் பழங்களையும் ஏற்றுங்கள் என்றார்கள்.

(ஆதாரம் : அஷ்-பாவுல் லிகாஷ் அயிழ் பாகம் 1 பக்கம் 74)

இதுவே அன்னாரின் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையின் தகுதியாகும். இது தம்மவர்களுடன் காட்டியதில்லை. எதிரிகளுடன் காட்டியதாகும். இதுவே உயர் நல்லொழுக்கமாகும். இவற்றில் வாரி வாரி வழங்குதலும் இருக்கிறது. பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையும் இருக்கிறது. பரந்த தைரியத்தின் வெளிப்பாடும் இருக்கிறது. இந்த ஆட்சேபனை செய்யும் அறிவிலிகள் அறிவில்லாமல் ஆட்சேபனை செய்கின்றனர். இந்த ரஹ்மத்துல் லில்ஆலமீனிடம் கடுமை இருந்தது. இன்னது இருந்தது. இன்னது இருந்தது என்கின்றனர்.

பிறகு திருக்குர்ஆன் மீது ஆட்சேபனை செய்கின்றனர். இதுவும் அந்த ஃபிலிமில் இருக்கின்றதாக கேள்விப்பட்டேன்; நான் பார்க்கவில்லை. ஹஸ்ரத் கதீஜாவுடைய சச்சாவின் மகனாகிய வர்க்கா பின் நவ்ஃபல் அவர்களிடம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு வந்த முதல் வஹிக்குப் பிறகு அவரிடம் ஹஸ்ரத் கதீஜா அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அழைத்துச் சென்றார்கள். அவர் தான் குர்ஆனை எழுதித் தந்தாராம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்விலும் காஃபிர்கள் செய்த ஆட்சேபனையே கொஞ்சம் கொஞ்சமாக நீர் இறக்கிக் கொண்டிருக்கின்ற இந்த குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தை என்றால் ஒரே முறையில் ஏன் இறங்கவில்லை என்பதுதான். ஆனால் பாவம் இவர்கள் முற்றிலும் அறிவிலிகள்! இன்னும் சொல்லப்போனால், வரலாற்றையும் இவர் அறியவில்லை. எவ்வாறிருப்பினும் இதனை தயாரித்தவர்கள்

அப்படிப்பட்டவர்கள்தான். ஆனால் அவர்களில் இருந்த இரண்டு பாதிரிளும் தம்மை பெரும் அறிவு படைத்தவர்கள் என்று கருதுகின்றனர். அவர்களும் அறிவைப் பொருத்தவரை முற்றிலம் மூடர்கள் ஆவார்கள். வர்கா பின் நவ்ஃபல் அந்தோ! நான் அப்போது உயிருடன் இருந்தால் உமது சமுதாயம் உம்மை ஊரை விட்டு வெளியேற்றும் போது உமக்கு உதவிக்கு இருந்திருப்பேனே என்று கூறினார். சிறிது காலத்திற்குப் பிறகு அவர் வஃபாத் ஆகி விட்டார்.

(புகாரி பாடம் பத்வுல் வஹி பாடம் 3, ஹதீஸ் எண் : 3)

பிறகு இந்த பாதிரி நான் கூறியது போன்று வரலாறு மற்றும் உண்மை சம்பவத்தின நிலைகளைப் பற்றியும் முற்றிலும் அறியாதவர் ஆவார். கிழக்கத்திய ஆராய்ச்சியாளர்கள் எப்போதும் திருக்குர்ஆனைப் பற்றி இந்த அதிகாரம் எங்கு இறங்கியது. அந்த அதிகாரம் எங்கு இறங்கியது? மக்காவில் இறங்கியதா? மதீனாவில் இறங்கியதா? என்று சர்ச்சையிலேயே எப்போதும் வீழ்ந்து கிடந்தனர். மேலும் இதை அவர் எழுதிக் கொடுத்து விட்டார் என்று கூறுகின்றனர். இப்படிப்பட்ட சர்ச்சையும் செய்து வருகின்றனர். திருக்குர்ஆன் யாரோ எழுதித்தந்தது என்று நீங்கள் கருதுவீர்கள் என்றால் அதுபோன்று ஒரு சூராவையாவது கொண்டு வந்து காட்டுங்கள் என திருக்குர்ஆன் அறைகூவல் விடுகின்றது. பிறகு உணர்ச்சிகளை மதிப்பது பற்றி கூறுவதானால் இதிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நிகர் வேறு யாருமில்லை. அன்னார் எல்லா நபிமார்களை விடவும் மேலானவர் என்று தாம் அறிந்திருந்தும் யூதர்களின் உணர்வுகளை மதித்தவாறு, மூஸாவை விட எனக்கு சிறப்பை வழங்காதீர்கள் என்று கூறினார்கள். (புகாரி ஹதீஸ் எண் : 2411)

ஏழைகளின் உணர்வுகளை மதித்தார்கள். எந்த அளவுக்கு அவர்களை கண்ணியப்படுத்தினார்கள் எனில் ஒரு சஹாபி செல்வந்தராக இருந்தார். அவர் மற்றவர்கள் மீது தமது மேன்மையை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். அவரது பேச்சை கேட்டு விட்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், உமது ஆற்றல் மற்றும் சக்தி, உமது இந்த செல்வம் ஆகியவை உனது சொந்த உழைப்பால் உம்மிடம் கிடைத்துள்ளதாக கருதுகிறீரா? ஒருபோதும் அவ்வாறன்று. உமது



சமுதாய ஆற்றல், பொருளின் ஆற்றல் அனைத்தும் ஏழைகள் மூலமாகவே வருகின்றன என்று கூறினார்கள்.

(ஆதாரம் : புகாரி, ஹதீஸ் எண் : 2896)

இன்று இக்காலத்தில் ஏழைகளின் உரிமைகளை நிலைநாட்டுவதாகவும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க முயலுபவராகவும் இந்த சுதந்திரவாதிகள் வாதம் செய்கிறார்கள். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் 1400 வருடங்களுக்கு முன்பே தொழிலாளிகளுக்கு அவர்களின் கூலியை வியர்வை உலரும் முன்பாக தந்து விடுங்கள் என்று கூறினார்கள். (ஆதாரம் : இப்னு மாஜா ஹதீஸ் எண் : 2443) ஆக, எங்கெல்லாம் சோதித்துப் பார்த்தாலும் அன்னார் மனித குலத்தின் பேருபகாரி ஆவார்கள். அதற்கு எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. நல்லொழுக்கத்தின் எந்தவொரு அம்சத்தை நீங்கள் எடுத்தாலும் சரி, அதன் உயர்ந்த முன்மாதிரிகள் அவர்களிடம் தென்படும். இவர்களின் ஆட்சேபனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண்கள் மீது அதிக பிரியம் உள்ளவர்கள் என்பதுமாகும். அவர்களின் திருமணங்கள் மீது ஆட்சேபனை செய்துள்ளார்கள் என்றால், அல்லாஹ் அதனை மறுத்தும் கூறியிருக்கின்றான். அப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கவிருக்கின்றன; அப்படிப்பட்ட கேள்விகள் எழவிருக்கின்றன என்பது அவனுக்கு தெரியும். எனவே இந்த ஆட்சேபனைகளுக்கான மறுப்பும் முன்னால் வருவதற்கான நிலைமைகளையும் உருவாக்கியிருந்தான்.

அஸ்மா பின்த் நுஃமான் பின் அபீ ஜவ்ன் பற்றி வருகிறது. இவர் அரபிகளின் அழகிய பெண்களில் ஒருவராக இருந்தார். இவர் மதீனா வந்தபோது மதீனத்துப் பெண்கள் அவரை பார்த்து விட்டு எல்லாரும் புகழ்ந்தார்கள். தமது வாழ்வில் இத்தகைய அழகிய பெண்ணை நாங்கள் பார்த்ததில்லை என்றனர். அப்பெண்ணின் தகப்பனாரின் விருப்பத்திற்கிணங்க அப்பெண்ணை 500 திர்ஹம் ஹக் மஹருக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்தார்கள். அப்பெண்ணிடம் சென்ற போது அப்பெண், 'உங்களிடமிருந்து நான் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்' என்று கூறினாள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதனைக் கேட்டு, 'நீ மிக மகத்தானவனின் அடைக்கலத்தை வேண்டியிருக்கிறாய்' என்று கூறி வெளியில் வந்து

விட்டார்கள். பிறகு அபு உஸைத் என்ற சஹாபியிடம் தமது இப்பெண்ணை அவளது வீட்டினரிடம் கொண்டு விட்டு விடுங்கள் எனக் கூறினார்கள். இதில் இன்னொரு விசயம் வரலாற்றில் உள்ளது. இந்த திருமணத்தின் போது தமது மகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு திருமணம் செய்யப்பட்டதில் அவளது வீட்டினர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். ஆனால் திரும்பி வந்ததும் மிகவும் கோபமுற்றார்கள்; அவளை ஏசினார்கள். (ஆதாரம் : அத்தப்காதுல் குப்ரா லஇப்னு ஸயீது பாகம் 2, பக்கம் 318-319)

இதுவே அந்த உயரிய மனிதர்! அவர் மீது தான் பெண் சார்பான வெறுக்கத்தக்க குற்றச்சாட்டு கூறப்படுகிறது. அன்னாரது திருமணங்களும் கூட இறைவனது கட்டளையாக இருந்தன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: மனைவியும் குழந்தைகளும் இல்லையாயின் குழந்தைகளால் சோதனைகள் வந்தால் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதும், மனைவியுடன் அழகிய பரிமாற்றம் குறித்தும் எப்படி முன்மாதிரி காட்டியிருக்க முடியும்? நாம் தெரிந்து கொள்ளும் அளவுக்கு இந்த முன்மாதிரி எப்படி நிலைநாட்டப்பட்டிருக்க முடியும்? அவர்களின் ஒவ்வொரு அமலும் இறைவனின் திருப்திக்காகவே இருந்தது. (செஷ்மாலோ மஃருபத் ரூஹானி கஸாயின் பாகம் 23, பக்கம் 300) ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்கள் பற்றி, அவர்கள் அன்னாருக்கு மிகவும் பிடித்தமானவராக இருந்தார் என குற்றம்சாட்டப்படுகின்றது. வயது அடிப்படையில் மிகவும் தவறாக பேசப்படுகிறது. ஆனால் ஹஸ்ரத் ஆயிசா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் முழு இரவும் எல்லாரையும் விட எனக்கு மிகவும் பிரியமான எனது இறைவனை வணங்க விரும்புகின்றேன் என சில இரவுகளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். (துர்ரே மன்சூர் தப்ஸீர் சூரா அத்துகான் வசனம் எண் 4, பாகம் 7, பக்கம் 350)

எனவே எவர்களுடைய மூளையில் அசுத்தங்கள் நிரம்பியுள்ளனவோ அவர்கள் இந்தக் குற்றச்சாட்டுகளைச் செய்வார்கள்; செய்து கொண்டும் இருப்பார்கள். நான் முன்னரே கூறியதைப்போன்று முன்னரும் இதுபோன்ற செயலை செய்து கொண்டிருக்கலாம். இத்தகைய மக்களால் நரகத்தை நிரப்புவதாக



இறைவன் முடிவு செய்து விட்டான். எனவே இம்மக்களும் சரி இவர்களுக்கு ஆதரவளிப்பவர்களும் சரி இறைவனது தண்டனைக்கு பயப்பட வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று இறைவன் தனது அன்பிற்குரியவர்களுக்காக மிகவும் தன்மானம் கொண்டவனாக இருக்கின்றான். (தர்யாகுல் குலூப் ரூஹானி கஸாயின் பாகம் 15, பக்கம் 378)

இக்காலத்தில் அவன் தனது மஸீஹ், மஹ்தியை அனுப்பி உலகை சீர்திருத்தத்தின் பக்கம் கவனமூட்டினான். ஆனால் இவர்கள் கேலி கிண்டலிலிருந்தும் அநீதியிலிருந்தும் விலகவில்லையாயின் இறைவனது பிடியும் மிகக் கடுமையானது. உலகின் ஒவ்வொரு பகுதியிலும் இன்று இயற்கை சீற்றங்கள் ஏற்படுகின்றன. எல்லா பக்கமும் அழிவு ஏற்படுகிறது. அமெரிக்காவிலும் வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. முன்னரை விட அதிகமாக வருகின்றன. வாழ்வாதாரத்தின் சீர்குலைவு அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. Global Warming (உலக வெப்பமாதல்) -ன் காரணத்தால் குடியிருப்புகள் தண்ணீரில் மூழ்கிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த ஆபத்துகளில் சூழப்பட்டுள்ளன. எனவே இந்த வரம்பு மீறுவோர் இறைவன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். இந்த அனைத்து விசயங்களும் இறைவன் பக்கம் கவனத்தை திருப்பக்கூடியதாக இருக்க வேண்டும். இவ்வாறு வீணான விசயங்களின் பக்கம் கவனம் செலுத்தக் கூடாது. ஆனால் துரதிஷ்டவசமாக இதற்கு மாற்றமாக நடைபெறுகிறது. வரம்புகளை மீற முயற்சி செய்யப்படுகிறது. காலத்தின் இமாம் எச்சரிக்கை செய்து விட்டார்கள். பகிரங்கமாக கூறி விட்டார்கள். உலகம் அன்னாரது குரலுக்கு செவிசாய்க்கவில்லை என்றால் அவர்களின் ஒவ்வொரு அடியும் உலகினை அழிவை நோக்கியே அழைத்துச் செல்லக் கூடியதாக இருக்கும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தூதுச்செய்தி மீண்டும் மீண்டும் கூறப்படுகிற தூதுச் செய்தியாகும். இது பெரும்பாலும் எடுத்து வைக்கப்படும். இன்று நான் அதனை மீண்டும் எடுத்து வைக்கிறேன்.

கூறுகின்றார்கள்: நினைவில் கொள்ளுங்கள்! இறைவன் எனக்கு பொதுவாக பூகம்பங்கள் பற்றி செய்தி தந்துள்ளான். நிச்சயமாக புரிந்து கொள்ளுங்கள். முன்னறிவிப்பிற்கு ஏற்ப அமெரிக்காவிலும் நிலநடுக்கங்கள் வந்தது போன்று ஐரோப்பாவிலும் வந்தது. மேலும் ஆசியாவின் பல்வேறு இடங்களிலும் வரும். அவற்றில் சில கியாமத்தின் முன்மாதிரியாக இருக்கும். எந்த அளவுக்கு மரணங்கள் ஏற்படும் எனில் இரத்த ஆறுகள் ஓடும். அந்த மரணத்திலிருந்து பறவைகளும் விலங்குகளும் கூட தப்பிக்க முடியாது. பூமியில் கடுமையான அழிவு ஏற்படும். மனிதன் பிறந்த நாளிலிருந்து அத்தகைய அழிவு ஒருபோதும் வந்திருக்காது. பெரும்பாலான இடங்கள் தலைகீழாகி விடும். முன்னர் குடியிருப்புகள் எதுவும் இருக்கவில்லை என்பது போன்று ஆகிவிடும். அவற்றில் அத்துடன் இன்னும் பல ஆபத்துகள் பூமியில் இருந்தும் வானத்திலிருந்தும் அபாயகரமான முறையில் உருவாகும். எந்த அளவுக்கு எனில் ஒவ்வோர் அறிவாளியின் பார்வையில் இவ்விசயங்கள் அசாதாரணமானவையாகி விடும். எந்த தர்க்கசாஸ்திர நூல்களின் அல்லது வானியல் நூல்களின் எந்தப் பக்கத்திலும் இதுபற்றி தெரிந்து கொள்ள முடியாது. என்ன நடக்கப் போகிறது? என்று மனிதர்கள் பதறிப் போவார்கள். பலர் ஈடேற்றம் பெறுவர். பலர் அழிந்து விடுவர். அந்த நாள் அருகில் உள்ளது.

இன்னும் சொல்வதாயின், அது வாசல் அருகே இருப்பதாக பார்க்கிறேன். உலகம் கியாமத்தின் முன்மாதிரியைப் பார்க்கும். பூகம்பங்கள் மட்டுமல்ல. இன்னும் பயங்கரமான ஆபத்துகள் வரும். சில வானத்திலிருந்து வரும். சில பூமியிலிருந்து வரும். காரணம் மனிதகுலம் தன்னை படைத்தவனை வணங்குவதை விட்டு விட்டது. அவர்களது சிந்தனை, குறிக்கோள், எண்ணம் ஆகிய அனைத்தும் உலகிலேயே விழுந்து விட்டன. ஒருவேளை நான் வராமல் இருந்திருந்தால் இந்த துன்பங்கள் வருவதில் கொஞ்சம் தாமதம் ஏற்பட்டிருக்கும். ஆனால், தூதரை அனுப்பாத வரை நாம் தண்டனையை வழங்குவதில்லை என இறைவன் கூறுவது போன்று என் வருகையுடன் மிக நீண்ட காலமாக மறைவாக இருந்த இறைவனது கோபத்தின் மறைவான எண்ணங்கள் வெளிப்படும். *வமா குன்னா முஅஸ்ஸிபீன ஹத்தா நப்அஸ ரஸூலா (17:16)* - தவ்பா செய்பவர்கள் பாதுகாப்புப் பெறுவர். ஆபத்துகள் வரும் முன்



பயப்படுபவருக்கு கருணை காட்டப்படும். இந்த பூகம்பத்திலிருந்து நீங்கள் பாதுகாப்பாக இருப்பீர்கள் என்று கருதுகிறீர்களா? அல்லது உங்கள் திட்டங்களால் உங்களைக் காப்பாற்ற முடியும் என்று கருதுகிறீர்களா? ஒருபோதும் முடியாது. மனித பணிகள் அன்றைய தினம் முடிந்து விடும்.

அமெரிக்காவில் பூகம்பங்கள் வந்தன. உங்களது நாடு அதிலிருந்து பாதுகாப்பாக இருக்கிறது. என்று கருதாதீர்கள். ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. ஆசியாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. தீபகற்பங்களில் வாழ்பவர்களே! எந்த செயற்கை கடவுளும் உங்களுக்கு உதவி செய்யமாட்டார். நான் நகரங்கள் வீழ்வதையும் குடியிருப்புகள் பாழடைவதையும் பார்க்கிறேன். அந்த ஏக இறைவன் நீண்ட காலம் வரை அமைதியாக இருந்தான். அவனது கண்களுக்கு முன்னர் வெறுக்கத்தக்க காரியங்கள் செய்யப்பட்டன. அவன் அமைதியாக இருந்தான். இப்போது அவன் கம்பீரத்துடன் தனது முகத்தைக் காட்டுவான். எவருடைய காதுகள் கேட்கக்கூடியவையாக இருக்கின்றனவோ அவை கேட்டுக் கொள்ளட்டும்! அந்த நேரம் தூரத்தில் இல்லை. நான் இறைவனது பாதுகாப்பின் கீழ் அனைவரையும் ஒன்று சேர்க்க முயன்றேன். ஆனால் இறை நியதியில் உள்ளது நிறைவேறுவது அவசியமாக இருந்தது.

கூறினார்கள்: நூஹின் காலம் உங்கள் கண் முன்னால் தோற்றமளிக்கும். லூத்தின் பூமியின் காட்சியை நீங்களே உங்கள் கண்களால் காண்பீர்கள். ஆனால் இறைவன் கோபத்தில் நிதானமானவன் ஆவான். தவ்பா செய்யுங்கள். அதன் மூலம் உங்கள் மீது கருணை காட்டப்படும். இறைவனை விட்டவர் மனிதனல்ல. புழு ஆவார். அவனைப் பயப்படாதவர் மரித்தவர் ஆவார். உயிருள்ளவர் அல்லர். (ஹகீகத்துல் வஹி ரூஹானி கஸாயின் பாகம் 22, பக்கம் 268-269) அல்லாஹ் உலகிற்கு அறிவை வழங்குவானாக! இந்த வெறுக்கத்தக்க அநீதியான வேலைகளை செய்வதிலிருந்து விலகட்டும்! அல்லாஹ் நமக்கும் நமது பொறுப்புகளை நிறைவேற்றும் வாய்ப்பை தந்து கொண்டிருப்பானாக!

*Translated by :*

Muallim **M. NIZAMUDEEN**